# II PUC ANNUAL EXAMINATION - 2022

# TAMIL 04

# SCHEME OF VALUATION

## பகுதி ஒன்று

ஏதேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடை எழுதுக: 10X1=10

1. காலத்தை வென்றாள்
2. இலைகளால் மூடப்பட்ட கிணற்று நீர் மான்கள் உண்டு எஞ்சிய கலங்கிய நீர்
3. எல்லாம் அறிந்தவர் இல்லை.
4. குட்டையான வாசற்படி இருந்ததால் குனிந்து போனால் போயிற்று என்றார்.
5. சாரல் மழைத்துளிகள் நாய் கறியை உண்டு பவன் என்று கூறி விலகிச் செல்லாது.
6. மூன்று உலோகத்தாலும் போற்றப்படும் இறைவன் அருகதேவன்.
7. லாரன்சோ என்ற வாலிபனைச் சேர்த்துக் கொண்டார்கள்.
8. மனிதன் மற்றும் உயிரினங்களின் வாழ்க்கை முறைகளையும், செயல்பாடுகளையும் பாதிக்கிறது.
9. முழு உருவச் சிற்பம், புடைப்புச் சிற்பம்.
10. தெய்வம் என்னும் கண்ணில் படாத சக்தியின் மீது மக்கள் ஆழமான நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.
11. மதிய உணவிற்காக அரிசி மாவைக் கொட்டி கொஞ்சம் உப்புமா கிண்டச் சொன்னார்.
12. மாந்தோப்புக்கு சொந்தக்காரரான மாதவராயர் வெகு நாட்களாகவே வேலப்பனின் வேலையைக் கவனித்து வந்தார்.
13. வைத்தியர் சுவாமிகளின் சிரிப்பு சில சமயங்களில் அலையலையாய் புரண்டு வரும்.
14. சரசுவின் மகன் பெயர் கணேஷ்.
15. சிறுமி விளையாடிய விளையாட்டின் பெயர் சொட்டாங்கல்.

## பகுதி - இரண்டு

அ. ஏதேனும் நான்கு வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக: 4X2=8

16. இளங்கோவடிகளால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், திருத்தக்க தேவரால் இயற்றப்பட்ட சீவகசிந்தாமணி இவை தமிழ் தாயின் அணிகலன்கள்.

17. மருதத்திணை பாடல் - வயலும் வயல் சார்ந்த பகுதியும் - தலைவன் தலைவியர் இடையே ஏற்படும் ஊடலும், ஊடல் தொடர்பான செய்திகள் உரிப்பொருள் ஆகும்.
18. இவ்வுலகில் வள்ளல் தன்மை உடையவர் எனும் பெருமையை அடையார் - புலி தாக்கி அஞ்சும் யானை போன்றோர் - மரம் போன்றவர்கள்.
19. மண்ணில் வேரூன்றி நிற்பது மரம் - பூவும், பிஞ்சும், காயும், கனியும் ஆக குடும்பத்துடன் தலைநிமிர்ந்து நிற்க பூமியின் பிடிமானம் மரத்திற்கு உதவுகிறது.
20. அப்பன் பெரும் கூலிஅடுப்புக்கு ஆகும் செலவுக்கு ஆகவில்லை - ஆத்தா பெரும் கூலி அம்மியில் வைத்து அரைக்கும் பொருட்கள் வாங்க போதவில்லை
21. விண்ணிற்கும் மண்ணிற்கும் கருப்பொருள் ஆனவன் - விளக்கிற்கும், அதன் ஒளிக்கும் - கண்ணில் காணும் அனைத்து பொருட்களுக்கும் கருப் பொருளாக இருப்பவன் நபிகள் நாயகம்.

ஆ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக: 3X2=6

22. லாரன்சாவும், இசபெல்லாவும், ஒருவரை ஒருவர் காதலித்தனர் - தங்கள் சகோதரி வேலையாள் ஒருவனை விரும்புவதை அவர்கள் தடுக்க நிறைத்தனர் - காட்டிற்கு அழைத்துச் சென்று லாரென்சாவை வெட்டிப் புதைத்தனர்.
23. போக்குவரத்து வாகனங்களால் - குறைகள் நிறைந்த நகர கட்டமைப்புத் திட்டங்களால் - தொழிற்பட்டறைகள் மற்றும் குடியிருப்பு பகுதியில் இருந்து உருவாகும் பேரொலியால் ஒலி மாசு ஏற்படுகிறது.
24. வாழும் மக்களுக்கு எண், எழுத்து ஆகியவை இரண்டு கண்கள் ஆகும் - வள்ளுவர் இதனை வாழும் உயிர்க்கு என கூறுவதால் அறிவு ஆண் பெண் வேற்றுமை தாண்டியது என்கிறார்.
25. மனிதன், கடவுள், தேவர், அரக்கர் மற்றும் உயிருள்ள விலங்கு, பறவை, மரம், செடி, உயிரற்ற மலை, கடல், போன்ற உருவங்களை அழகுபடச் செதுக்குவது சிற்பக்கலை.
26. அரை வீசம் பாதாம் பருப்பை ஊற வைத்து அரைத்து - சம அளவு வெண்ணெய் உடன் சேர்த்து - பிசைந்து சினீப்பாகில் கொட்டிக் கிளறி - குங்குமப்பூ, பச்சைக் கற்பூரத்தையும் மேலே தூவ வீண்டும் என செய்முறை பற்றி விளக்கினான் குப்புசாமி.

இ. இரண்டு மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக: 3X2=6

27. டோக்கியோ, ஒஸாகா, கியோத்தோ நகரங்களில் உள்ள சில ஜப்பானிய நண்பர்களின் விவரங்களை கொடுத்தான்.
28. வேலப்பன் தேக்கு மரத் துண்டுகளை வாங்கி வந்து கூர் வாங்கிக் கட்டில்களைச் செய்வான் - கட்டிலுக்கு படுக்கை பின்னி விடுவது வேலப்பன் மனைவியின் வேலை - எடுபிடி வேலைகளை குழந்தைகள் செய்வார்கள்.
29. பிணங்களில் இருந்து எழுந்த புகை நடுவே சுடுகாட்டில் திரியும் சிவபெருமானைப் போல - குடிசையைச் சுற்றிலும் தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த குழிகளின் புகை நடுவே - வைத்திய சுவாமிகள் சஞ்சரித்துக் கொண்டிருந்தார்
30. நடமாட்டத்தை குறைப்பான் - போர்வையால் மூடி படுத்துக் கொள்வான் - ரசம் வை, கடலை துவையல் செய் - நாக்கு செத்துப் போச்சு என்று மனைவியை வேலை வாங்குவான். தைலம் தேச்சு விடு - உடம்பைப் பிடித்து விடு என்று உத்தரவு பிறப்பிப்பான்.
31. வானமே இடிந்து விடும் ஓசையுடன் மழை பெய்யும் - கோடி கோடி வண்டுகள் ஒருசேர காதில் ரீங்காரம் இடுவதை போன்று அசுர சப்தத்தை எழுப்பும் மழை.

பகுதி - மூன்று

எதையேனும் இரண்டிற்கு இடம் சுட்டி பொருள் விளக்கம் எழுதுக:
2X3=6

32. இடம் : இறை வாழ்த்து
ஆசிரியர் - இராமலிங்கம் பிள்ளை
பொருள்: கடவுளின் நிலையை விளக்குதல் - எண்ணங்களுக்கு அப்பாற்பட்ட அவரை புரிந்து கொள்வது அரிது.
33. இடம்: சங்க இலக்கியம் - நற்றிணை
ஆசிரியர் - வெள்ளிவீதியார்
பொருள்: என் நாடு வந்து இரை கொண்ட நாரை நன்றி பாராட்டும் நீ எனது அன்பினை தலைவனிடம் கூறுவாயா? அல்லது மறதியால் சொல்லாமல் விட்டு விடுவாயோ?
34. இடம்: அற இலக்கியம், திருக்குறள்.
ஆசிரியர் - திருவள்ளுவர்
பொருள்: முயற்சி இல்லாதவர் மரத்தைப் போன்றவர் உருவத்தால் மக்கள் வடிவில் இருப்பினும் மரத்திற்கே ஒப்பாவர்.
35. இடம்: மறுமலர்ச்சிப் பாடல்கள் - எழுக மனிதனே
ஆசிரியர் - இன்குலாப்
பொருள்: சிறகு அசைத்தாலே கிரகங்கள் அசையும் - அவ்வாறு இருக்க தூசி மேடு ஒரு பாரமா என மனிதனை கேட்டு கேட்கிறார்.
36. இடம்: வழிபாட்டுப் பாடல்கள் - இயேசு கிறிஸ்து
ஆசிரியர் - எச் ஏ கிருஷ்ணப்பிள்ளை.

பொருள்:  உலகத்தை தன் அன்பின் சக்தியால் ஆண்டுகொண்ட இயேசு பெருமான் எலும்பும் தசையும் கொண்ட உடலோடு இவ்வுலகில் பிறந்து மக்களின் பாவங்களுக்காக மரித்தார்.

ஆ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப்  பொருள் விளக்கம் எழுதுக :
1X3=3

37. இடம்:  உரைநடை, பாடம் -   ஒலி மாசு
ஆசிரியர் -  சுப்பிரமணியன், பத்மாவதி
பொருள்: ஒலி மாசு மனிதர்களை மட்டுமல்ல பறவைகளையும் விலங்குகளையும் கூட பாதிக்கின்றன என்பதை விளக்குதல்.

38. இடம்:  உரைநடை, பாடம்  - பெண் கல்வி.
ஆசிரியர்:  ஜீவா
பொருள்: திருக்குறள் ஒரு அறிவுக் களஞ்சியமாக விளங்குகிறது என்பதை விளக்கும் பொழுது அவற்றில் பழமையும் புதுமையும் கலந்து இருக்கின்றன என்கிறார்.

39. இடம்:  உரைநடை, பாடம் -  கருநாடகத்தில் பக்தி இயக்கம்.
ஆசிரியர் - சிவலிங்கம்.
பொருள்: சமூகத்தை சீர்திருத்தத்திற்காக பக்தி இயக்கங்கள் தோன்றி மக்களிடம் ஒற்றுமையை வளர்த்தன.

இ. ஏதேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப்  பொருள் விளக்கம் எழுதுக:
1X3=3

40. இடம்: புறநடைப் பகுதி,  பாடம் - யோஷிகி
ஆசிரியர்: தி ஜானகிராமன்
பொருள்:  ஆசிரியர் முழு சைவம் என்பதால் ஓட்டல் பணியால் ஹிரோமி  வருத்தப்பட்டதால்  அதற்கு ஆசிரியர் கூறியது.

41. இடம் பொருள் நடை பகுதி,  பாடம் -  சுயநலம்
ஆசிரியர் -  விந்தன்
பொருள்:  மாதவராயர் மனதில் ஒரு எண்ணத்தை வைத்துக்கொண்டு வேலப்பன் மேல் அக்கறை உள்ளவர் போல வெயிலில் வேலை செய்கிறாய் என்று கேட்டார்.

42. இடம்:  புறநடைப்  பகுதி,  பாடம்  - புகைச்சல்
ஆசிரியர்  -  ஜெயகாந்தன்
பொருள்: வயதானதால் தன்னை மதியாமல் இருக்கிறார்கள் என்ற தவறான எண்ணம் கொண்டு மகனையும் மனைவியையும் கோபித்துக்கொண்டு செட்டியார் கூறிய சொற்கள் இவை.

பகுதி -  நான்கு

எதையேனும் ஊன்றி நிற்க ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 3X5=15

43. கடவுள் இல்லாத காலம் இல்லை - பொருளென்றும் இல்லை - எண்ணங்களுக்கு எட்டவில்லை - வேதங்கள் சொல்வது புரியவில்லை - அல்லா அரன் அரி இயேசு எனப் பெயர்கள் பல உண்டு - கொடுக்காத உருவம் இல்லை - வழங்காத நாமம் இல்லை - கல்லாதவர் மனதில் கூட கருணை வடிவாக காணாமல் இருப்பவர்.
44. வெண்மை நிறம் கொண்ட நாரையே - நம் ஊருக்கு வந்து கெளிற்று மீனை உண்டாய் - என் தலைவன் ஊருக்கு செல்கிறாய் என் பிரிவுத் துயரத்தை அவரிடம் கூறுவாயாக - அவரைப் போல் நீயும் மறந்துவிடாதே - அன்பு இருந்தும் மறதியால் மறந்து போகாதே - மறந்துபோகாமல் இருப்பாயாக - தலைவன் தன்னை மறந்தது போல நீயும் மறவாமல் இரு - செய்தியைக் கூறு என்பதாகும்.
45. ஊக்கமுடைமை என்பது மனிதன் தன் மனதில் உறுதியை கொண்டிருத்தல் என்பதாகும் - ஒருவர் மிகவும் பெறத்தக்க சிறப்பு - இது அனைத்து செல்வங்கள் இருந்தும் ஊக்கம் இல்லை ஒன்றும் இல்லாதவர் - ஊக்கமே நிலையான செல்வம் - நிலையான உறுதிப்பொருள் - ஊக்கம் உடையவனிடம் செல்வம் தானாக வந்து சேரும் - நீர் பூக்களின் உயர்வு நீரின் அளவைப் பொருத்து இருக்கும் - மக்களின் உயர்வு அவர்கள் கொண்ட ஊக்கத்தின் அளவை பொருத்தது - அம்பு பட்ட யானை இறுதிவரை போராடும்.
46. இறைவனை கோயில் முழுவதும் தேடினேன் - உயர்ந்த கோபுரங்களில் ஏறி தேடினேன் - காணவில்லை சிற்பங்களையும் சிலையின் கண்டேன் - சித்திரங்களை கண்டேன் - அற்புதம் மூர்த்தியை காணவில்லை என தலைவி தோழியிடம் கூறல் - உள்ளத்தில் தேடாமல் பிற இடங்களில் தேடிய நிலை.
47. நீண்ட நாட்களாகப் பிள்ளை இல்லா குறையை நீக்க பிறந்த குழந்தை - என்று இருந்து இறைவனின் அருளால் பிறந்த குழந்தை - மலடன் மலடி என்ற தீய பெயரை பெறாமல் இருக்க வந்த குழந்தை - குழந்தை தாலாட்டு - நாட்டுப்புற பாடல் அமைந்தது
48. சமணக் கடவுள் முதலும் முடிவும் இல்லாதவன் - மூன்று உலகங்களுக்கும் முதலானவன் - தேவர்களுக்கெல்லாம் முதலானவன் - அவனை வணங்குவதால் குறையாத இன்பம் கிடைக்கும்.

ஆ எவையேனும் இரண்டிற்கும் ஐந்து அல்லது ஆறு வரிகளில் விடை எழுதுக: 2X5=10

49. காதலன் கொல்லப்பட்ட நிலையை கனவில் அறிதல் - காட்டிற்கு சென்று அவன் தலையைக் கொண்டு வந்து பூந்தொட்டி வைத்து மலர் செடி வளர்த்தல் - தினமும் செடியை கண்ணீரால் அர்ச்சித்தல் - அதனை வணங்குதல் - அதனுடன் பேசுதல் போன்றவை ஆகும்.
50. தேவையில்லாத இரைச்சல் மன உளைச்சலை ஏற்படுத்தும் - உடல் பாதிக்கும் சோர்வடையும் - முன்கோபம் உண்டாகும் - மன அழுத்தம் ஏற்படும் - இதய நோய் உண்டாகும் - உறக்கம் கெடும் - காது கேட்கும் திறன் குறையும் - மறதி கோபம் அடுத்தவரை தாக்குதல் போன்றவை ஏற்படும்.
51. புதுக்கோட்டைக்கு அருகில் அமைந்துள்ளது - குகைக் கோயில் மற்றும் மலையில் கோயில் அமைத்தவன் முதலாம் மகேந்திரவர்மன் - மகேந்திரவர்மன் அவனது பட்டத்துராணி உருவம் இருக்கும் - இரண்டு நடன மாதர்களின் ஓவியம் அமைந்துள்ளன - தாமரைகள் நிறைந்த அகழி ஓவியம் இருக்கும் என விளக்குகிறார்.
52. ஹரிதாசரின் பக்தி இயக்கம் 14 முதல் 17 ஆம் நூற்றாண்டு வரை இருந்தது - பக்தியை மக்கள் சார்ந்ததாகும் சமுதாயத்தை சார்ந்ததாகவும் மாற்றியவர் புரந்தரதாசர் - சமூக சிக்கல்களை பற்றிய எள்ளலுடன் கீர்த்தனைகளை உருவாக்கியதன் காரணமாக இடம் பிடிக்கிறார் - புரந்தரதாசர் இந்த இருவரின் தொண்டின் காரணமாக ஹரிதாசர் இயக்கம் இன்றளவும் என்னை நினைவு கொள்ள தக்கதாக இருக்கிறது.

இ ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களை விடை எழுதுக: 2X5=10

53. ஜப்பானை யாரும் பிடிக்கவில்லை என்று கூறமாட்டார்கள் - ஆரோக்கியமான அழகான மக்கள் - ஒரு நரை முடி கூட பார்க்கவில்லை - சிடுமூஞ்சி இல்லை - எந்த பஸ் ஸ்டாப்பில் ஒரு நிமிடத்திற்கு மேல் காத்திருக்க வேண்டியதில்லை - சில்லறை இல்லை என்ற குரல் இல்லை - கத்தவும் இல்லை சில்லறை கொடுக்க மறக்கவும் இல்லை - ஹிபியா பார்க்கில் மறந்து போன தனது பர்சு அதே இடத்தில் இருந்ததை காண முடிந்தது - மதிய உணவு உண்ண ஆயிரம் பேருக்கு மேல் இருக்கிறார்கள் ஒரு கூச்சல் இல்லை - குழப்பம் இல்லை - சிகரெட் பிடிப்பதில்லை.
54. தன் மகனுக்காக மனைவிக்காக எவ்வளவு செய்து இருப்பேன் - ஆனால் அவர்கள் என்னை மதிக்கவில்லை - காலை உணவு சரியான நேரத்தில் கொடுக்கவில்லை - என் மகன் சிறுவயதில் உடல்நிலை சரியில்லாமல் இருந்த போது உயிரை காப்பாற்ற

வேண்டி பல வேலைகளை செய்தேன் - ஆனால் அவன் இன்று தன் தாயார் பேச்சைக் கேட்டுக் கொண்டு என்னை மதிப்பதும் இல்லை.

55. கடுமையான காய்ச்சலால் சோர்ந்திருந்த தன் தாயின் முகம் கண்டான் - பதறினான் - சிறுநீர் கழிப்பதை மறந்தான் - உடலின் வெப்பத்தை உணர்ந்தான் - தன் கூடையில் இருந்த காய்ந்த ரொட்டியை அம்மாவின் வாயில் திணித்தான்- பஞ்சு விரலால் அன்னையின் கண்ணம் வருடினான் - கன்னத்தில் அழகாக முத்தமிட்டான்.

56. வானம் பிளந்தது போல் மழை கொட்டியது - கொடுமையான நரகத்தில் மாற்றியது போல் உணர்ந்தாள் - பேய் மழையின் சத்தம் இடைவிடாமல் ஒலித்தது - தெரிந்த கடவுளின் பெயரை மனதில் மன்றாடி மழையை நிறுத்துமாறு வேண்டினாள் - பலனில்லை - மூர்க்கமான மழையால் வானமே இடிந்து விடும் என்பது போல மழை அச்சுறுத்தியது.

பகுதி - ஐந்து

அ. பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக: 1X5=5

57. எடுத்துக்காட்டு உவமையணி

58. எடுத்துக்காட்டு உவமையணி.

59. தமிழ்த்தாய், நாடெங்கள்

60.. சிறகு + அசைத்தால், சிலை + கண்டேன்.

61. தோல்வி, தீமை.

62. ஊரெங்கும் கண்ணுக்கினிய காட்சிகள் அமைந்திருந்தன.
பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது சிறந்தது.

63. குலோத்துங்க சோழன், மலர்.
குழந்தை செல்வங்கள் பிள்ளைக் கனியமுதாகப் போற்றப்படுகிறது.

64. எளிமை, தொடர்பு.

65. 66. 67. தலைப்போடு தொடர்புடையதாகக் கட்டுரை அமைய வேண்டும் - முன்னுரை பொருளுரை முடிவுரை இருத்தல் வேண்டும்.

68, 69 அலுவலக கடிதத்தில் கடித உறுப்புகள் இருக்க வேண்டும்.
அனுப்புநர், பெறுநர், இடம், தேதி, பொருள் போன்றவை
தோழிக்கு/தோழனுக்கு எழுதும் கடிதம் இயல்பானதாக இருக்கலாம்.

70. பழமொழியை விளக்கி பொருள் உணர்ந்து வாக்கியத்தில் அமைத்தல் வேண்டும்.